DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC.211/2024

Prosecution witness – PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.உதயசங்கர் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present.)
03.03.2026 at 01.55 P.M.

முதல் விசாரணை

1. நான் தற்போது சிக்கல் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 17.09.2024 ம் தேதியன்று 20.00 மணியளவில் சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் என்னுடன் வந்த இரண்டாம் நிலைக்காவலர் 1124 திரு.வேல்முருகன் ஆகியோர் சகிதம் சிக்கல் R.M.பெட்ரோல் பல்க் அருகே ரோந்து சென்ற போது அங்கே சந்தேகப்படும் படியாக நின்ற சிக்கல் வடக்குத் தெருவை சேர்ந்த ஆறுமுகம் மகன் கோவிந்தராஜ் என்பவர் ஓட எத்தனித்தவரை பிடித்து சோதனை செய்த போது அவரிடம் 180 ML அளவுள்ள Old Chef என்ற லேபிளுடன் கூடிய 18 மது கண்ணாடி பாட்டில்கள் இருந்தது. சம்பவ இடத்தில் தனிநபர்கள் யாரும் இல்லாததால் நானும், இரண்டாம் நிலைக்காவலர் 1124 திரு.வேல்முருகன் ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து 18 மதுபாட்டில்களுன் கைப்பற்றி எதிரியையும் சார்பு ஆய்வாளர் கைது செய்தார். பின்னர் எதிரிகள் சொத்துக்கள் சகிதம் நிலையம் வந்து நிலையக்குற்ற எண். 102/2024 பிரிவுகள் 4(1)(C) TNP Amendment Act 2024 ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். நான் கையொப்பம் செய்த அந்த அத்தாட்சி அ.சா.ஆ.1 ஆகும். நானும், இரண்டாம் நிலைக்காவலர் 1124 திரு.வேல்முருகன் என்பவரும் சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். இது தொட்ரபாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பவ இடத்திற்கு அருகே R.M. பெட்ரோல் பல்க் உள்ளது. அங்கே எப்போதும் ஆட்கள் பணியில் இருப்பார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு பின்புறம் அரசு

மதுபானக்கடை உள்ளது என்றால் சரிதான். எதிரி கையில் வைத்திருந்ததாக கூறப்படும் பையானது என்ன கலர் எந்த வகையானது என்று சார்பு ஆய்வாளர் விசாரணையில் நான் கூறவில்லை என்றால் சரிதான். சம்பவ நேரமானது அரசு மதுபானக்கடை திறந்து இருக்கும் என்றால் சரிதான். வழக்கமான ரோந்து பணியில் சென்றோமா அல்லது தகவல் கிடைத்த பேரில் சென்றோமோ என்றால் தகவல் கிடைத்ததன் பேரில் சம்பவ இடத்திற்கு சென்றோம். நான் சம்பவ தினத்தன்று சம்பவ இடத்தில் இருந்தது குறித்து காவல் நிலைய பொது நாட்குறிப்பேட்டில் குறிக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். இந்த வழக்கில் என்னுடன் பணிபுரிந்த காவலர்கள் என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் வைத்து எதிரியிடமிருந்து மதுபாட்டில்களை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அத்தாட்சியானது வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. புள்ளிவிவர கணக்கிற்காக மேலகதிகாரியின் உத்தரவின் பேரில் போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. இந்த வழக்கில் புகார்தாரரும், சார்பு ஆய்வாளரும் எங்கள் காவல்நிலையத்தில் பணிபுரிந்தார்கள் என்றால் சரிதான். எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.03 16:47:58 +0530